திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த தீ விபத்து ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? இதிலே எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தற்செயலாக நேர்ந்த விபத்து என்று போலீஸார் முடிவு கட்டியிருக்கிறார்கள். சுமார் 25 ஆயிரம் ரூபாய்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த விபத்தினால் இரண்டு பெரிய சொஸைடிகள் அம்பாசமுத்திரம் கூட்டுறவு சொஸைடி, தேங்காய் பட்டணம் கூட்டுறவு சொஸைடி ஆகிய இரண்டு பெரிய சொஸைடிகளில் சேதம் ஏற்பட்டிருக்கிறதே இதை ஈடுகட்ட அரசு நஷ்ட ஈடு எவ்வளவு கொடுத்திருக்கிறது? இப்படிப்பட்ட பெரிய கண்காட்சியிலே தீயணைப்பு எஞ்சின் அங்கே இல்லாமல் இருந்திருக்கிறது, கண்காட்சி நடந்து கொண்டிருக்கும்போது ஏன் அந்த எஞ்சின் அங்கே வைக்கப்படவில்லை என்பதைப் பற்றி அரசு விசாரித்திருக்கிறதா? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது திருநெல்வேலியில் நடைபெற்றது. அந்த நகரத்திலேயே தீயணைப்புப் படை இருக்கிறது. ஆகவே, அங்கேயே வைக்கப்பட வேண்டிய அவசியமில்லை. இந்த நஷ்டத்தை ஈடுகட்ட மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் கூட்டுறவு சங்கங்களிலிருந்தும் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்தும் நன்கொடை வசூலித்து ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கண்காட்சிகளில் இப்படி நஷ்டம் ஏற்பட்டால் நாம் ஈடுகட்டுவதற்குப் பதிலாக இந்த கண்காட்சிகள் நடத்துகிறபோதே அவைகள் எல்லாம் ஃபைர் இன்ஷூரன்ஸ் செய்துகொள்ள வேண்டுமென்ற முறையிலே ஏதாவது வழிவகை இருக்கிறதா? அப்படி இருந்தால் இந்த கண்காட்சியும் செய்துகொள்ள வேண்டுமென்று இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கப்பட்டதா?